FWC

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

## நான்காம் தவணைப் பரீட்சை - 2021

## Conducted by Field Work Centre, Thondaimanaru.

## 4th Term Examination - 2021

| | | | |
|---|---|---|---|
| பரதநாட்டியம் I | Two Hours | 53 | T I |
| Dance I | Gr -13 (2021) | | |

பகுதி I

❖ **1 – 50 வரையுள்ள வினாக்களுக்கு பொருத்தமான விடையினை தெரிவு செய்க.**

01. "வினையற வேல்வாங்கும் பெருமான்" என குறிக்கும் கடவுள்.
    1) விநாயகர் 2) முருகன் 3) கிருஸ்ணன் 4) சிவன் 5) பார்வதி

02. ஸ்தானக பேதத்தில் தவம் செய்யும் நிலையினை குறிக்கும் பாதநிலை.
    1) ஐந்திரம் 2) காருடம் 3) ஏகபாதம் 4) ஸ்தானகம் 5) மோடிதம்

03. வர்ணத்தின் உத்தராங்கப் பகுதியில் இடம்பெறுவது.
    1) சரணம், சரணஸ்வரம் 2) பல்லவி அனுபல்லவி 3) முத்தாய்ஸ்வரம், சரணம்
    4) அனுபல்லவி, சரணம் 5) பல்லவி, அனுபல்லவி, முத்தாய்ஸ்வரம்

04. நடிகர்களின் பேச்சு நன்றாகக் கேட்பதற்கும், முகபாவங்களைத் தெளிவாகப் பார்ப்பதற்கும் என பரதமுனிவரால் கூறப்பட்ட அரங்கு.
    1) விகிருதம் 2) சதுரசிரம் 3) திரியசிரம் 4) சேஷ்டம் 5) மத்யம்

05. முருகனை வாழ்த்தியும் புகழ்ந்தும் ஆடும் நடனம் எது?
    1) குன்றக்குரவை 2) ஆய்ச்சியர்குரவை 3) வேட்டுவவரி
    4) சாக்கையர்கூத்து 5) வரிக்கோலம்

06. ரௌத்ர ரஸத்திற்கு உரிய நிறம்.
    1) பச்சை 2) வெள்ளை 3) நீலம் 4) சிவப்பு 5) கறுப்பு

07. பெஹாக், சாரங்கா போன்ற ராகங்கள் எவ் ரஸத்திற்கு உரியது.
    1) பீபத்ச 2) அற்புத 3) பயானக 4) வீர 5) கருணா

08. நாயகி நாயகர்களைச் சேர்த்து வைப்பதில் திறமை உடையவன்.
    1) விடன் 2) விதூஷகன் 3) பீடமர்த்தன் 4) சடன் 5) சேடன்

09. ; ; ; ; ; ; ததீங்கிணதொம் ததீங்கிணதொம் ததீங்கிணதொம் அமைந்த ஜாதி எது?
    1) சதுஸ்ரம் 2) கண்டம் 3) மிஸ்ரம் 4) திஸ்ரம் 5) சங்கீர்ணம்

10. சங்கீத சுரபூஷனி எனும் நூலின் ஆசிரியர்.
    1) அருணாசல நட்டுவனார் 2) வழுவூர் இராமையாப்பிள்ளை
    3) வெங்கடாச்சலம் 4) அருணாசலம் 5) ரகுநாதர்

11. பிரத்தியாங்கத்தில் இடம் பெறாதது
    1) புயம் 2) முன்கைகள் 3) முதுகு 4) இடை 5) வயிறு

12. தௌரீயத் திரிகம் என்பது
    1) மலர், நீர், தூபம் 2) கீதம், வாத்தியம், நிருத்தியம்
    3) கீததிருத்தம், நிருத்தியம், நாட்டியம் 4) அபிநயம் 5) லகு, திருதம்

13. கோவில்களில் நாள்தோறும் சந்திகளில் நடைபெறும் வழிபாடு.
1) ஸ்ரீபலி 2) நவஸத்தி நாட்டியம் 3) கீத உபசாரம்
4) நிருத்யோபசாரம் 5) புஷங்க லலிதம்

14. பாலை நிலத்தைச் சார்ந்த ஆடல் வகை.
1) ஆய்சியர் குரவை 2) குன்றக்குரவை 3) வேட்டுவவரி
4) வெறியாடல் 5) துணங்கைக் கூத்து

15. "தகஜெணு தகுந்தரி" என்பதன் எண்ணிக்கைச் சமனாக அமையும் பிறிதொரு அமைப்பு.
1) தகதிமி தகதிமி 2) தகிடதகிட 3) தகிடதகதிமி
4) தகதிமி தகதகிட 5) தகதகிட

16. நாட்டிய சாஸ்திரத்தில் 108 கரணங்களையும் விளக்கும் அத்தியாயம் எது?
1) நான்காம் அத்தியாயம் 2) பத்தாம் அத்தியாயம் 3) எட்டாம் அத்தியாயம்
4) இரண்டாம் அத்தியாயம் 5) ஐந்தாம் அத்தியாயம்

17. கோஷயாத்ரா எனும் நூலில் குறிப்பிடப்படும் ஸாஸ்திரிய நடனம்.
1) பரதம் 2) மோகினி 3) குச்சுப்புடி 4) கதகளி 5) ஒடிசி

18. நான்குவகை உதரா நாட்டியம் நிகழ்த்தியதாக ரகுநாத நாயக்கரினால் குறிப்பிடப்படும் பெண்.
1) ஊர்வசி 2) சந்திரலேகா 3) ரம்பா 4) ரூபவதி 5) கோமளவல்லி

19. பிண்டி பிணையல் முதலான கை அசைவுகள் பற்றிக்கூறும் நூல்.
1) அபிநயதர்ப்பணம் 2) நாட்டிய ஸாஸ்திரம் 3) சிலப்பதிகாரம்
4) நாட்டியக்கலை 5) பரதக்கலை

20. விஷம சஞ்சரக என்பது.
1) இருபக்கமும் வளைந்து செய்தல் 2) சர்ப்பநடை
3) கால்களைக் குறித்தல் 4) முன்னோக்கி ஓடுதல் 5) முன் நடத்தல்

21. தினைப்புலத்தில் பறவைகளை விரட்டப் பயன்படும் இசைக்கருவி.
1) போர்ப்பறை 2) வெடி 3) வெருடட்பறை
4) முல்லைநிலப்பறை 5) பாலைநிலப்பறை

22. இருபாதங்களின் விரல்களில் ஆரம்பித்து முழுப்பாதங்களும் நிலத்தில் படும் வண்ணம் ஆடுவது.
1) யக்பத மாத்ரய 2) யாதினி மாத்ரய 3) சிந்து மாத்ரய
4) முல்மாத்ரய 5) பட்டுதல் மாத்ரய

23. சமயத்திற்கு தகுந்தபடி உருமாறிக் கொள்பவள்.
1) இலிங்கினி 2) சில்பினி 3) தானி 4) சேடி 5) சகி

24. பரதக்கலையின் காப்பகமாக விளங்கும் ஆலயம்.
1) மீனாட்சி ஆலயம் 2) சிதம்பரம் 3) காஞ்சிகைலாசநாதர்
4) தஞ்சைப் பெருங்கோவில் 5) ஆழ்வார் கோவில்

25. பொன்னால் வேயப்பட்ட சபை
1) நிருத்தசபை 2) தேவசபை 3) ராஜசபை 4) சிற்சபை 5) பொன்னம்பலம்

26. சங்ககாலத்தில் கணிக்காரி, சாலினி, தேவராட்டி என்ற பெயர்களில் அழைக்கப்பட்டவர்கள்.
1) பாடும் பெண்கள் 2) இசைக்கருவி இசைப்போர் 3) குரவை ஆடும் பெண்கள்
4) வெறியாடும் பெண்கள் 5) துணங்கை ஆடும் பெண்கள்

27. மெய்திக்கள் என்ற இனத்தவரால் ஆடப்பட்ட சாஸ்திரிய நடனம்.
1) கதகளி 2) குச்சுப்புடி 3) மணிப்புரி 4) கதக் 5) ஒடிசி

28. பரண கணித என்பவருக்க குஷ்டரோகத்திலிருந்து விடுதலை பெற பாடப்பட்ட கவி.
1) கௌத்துவம் 2) கீர்த்தனம் 3) ஜாவளி 4) திருப்புகழ் 5) சிந்துவண்ணம்

29. தனது பெரும் பொழுதை நடனக் கலைக்கென்றே செலவழித்தவர்.
1) சிம்மவிஷ்ணு 2) மகேந்திரவர்மன் 3) இராஜசிங்கன்
4) நந்திவர்மன் 5) மகேந்திரவிக்கிரமன்

30. பாத்திரமானவள் பாடலை தானே பாடி அபிநயிக்கும் வாச்சிகம்.
1) சுகீத 2) உபகீத 3) சப்த 4) உபசப்த 5) சுசப்த

31. சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்தை ஆரம்பித்தவர்.
1) செல்லையா இராசதுரை 2) சுவாமி விபுலானந்தர் 3) சேர்பொன் இராமநாதன்
4) அ.நடேசபிள்ளை 5) கலாநிதி ஆனந்தகுமாரசாமி

32. இறைவனை தோழனாக கருதி வழிபடும் பக்தி.
1) மதுரபக்தி 2) லாவண்ய பக்தி 3) மூர்க்கபக்தி
4) சாக்கிய பக்தி 5) வாத்சல்ய பக்தி

33. தர்மவீரனுக்கு உதாரணமாக விளங்கும் நாயகன்.
1) ஸ்ரீராமன் 2) சித்தார்த்தன் 3) அர்சுனன்
4) சிபிச்சக்கரவர்த்தி 5) கர்ணன்

34. பரதநாட்டியத்தில் சப்தம் வர்ணம் போல் கதக் நடனத்தில்
1) பஜன் கஸல் 2) வெஸ்நையாண்டி 3) துருபத்தும் கயலும்
4) பதம் ஜாவளி 5) கர்தார் சோலம்

35. குதிரை பாய்வது போல் அமைந்த பாதபேதம்.
1) கர்த்தரீ 2) அஸ்வோத்பினவனம் 3) மோடிதம்
4) க்ருபாலகம் 5) அலகம்

36. பதினொரு வகை ஆடலில் திருமகள் ஆடிய கூத்து.
1) பேடி 2) அல்லியம் 3) குடமாடல் 4) கடைச்சியர் 5) பாவை

37. நாட்டியக்காரர்களையும் அவர்களுடைய சமூக பொருளாதார நிலையையும் பேசுகின்ற பூரி நகரின் ஏடு.
1) மதஸ்பஞ்சி 2) மண்டலபஞ்சி 3) நிருத்தபஞ்சி
4) நாட்டிய ஸாஸ்திரம் 5) கோஷயாத்ரா

38. பாத்திரம் ஆனவள் கண்களைக் கொண்டு அபிநயிக்கும் சாத்விகா அபிநயத்தின்
1) சாட்சுஷிய சாத்விகம் 2) வியஞ்சகம் 3) அஷ்ரு
4) வைவர்ணயம் 5) ரோமாஞ்ச


39. சங்கீத மேளம் தோற்றுவிக்கப்பட்ட காலம்.
1) சங்ககாலம் 2) சோழர் காலம் 3) பல்லவர் காலம்
4) நாயக்கர் காலம் 5) ஆங்கிலேயர் காலம்

40. தஞ்சைப்பிருகதீஸ்வரர் ஆலயத்தில் ராஜமோகினி என்ற பாத்திரத்தை ஏழு ஆண்டுகள் தொடர்ந்து அபிநயித்தவர்.
1) பந்தணை நல்லூர் மீனாட்சி சுந்தரம்பிள்ளை 2) பந்தணை நல்லூர் சபாரஞ்சிதம்.
3) தஞ்சாவூர் சுப்பராயநட்டுவனார். 4) அபிநய அரசி பாலசரஸ்வதி.
5) கலைமாமணி ருக்மணிதேவி அருண்டேல்.

❖ **41 – 45 வரையான வினாக்களுக்கு அட்டவணையைப் பயன்படுத்தி மிகப்பொருத்தமான விடையை தெரிவு செய்க.**

| | **ரஸம்** | **தோற்றம்** | **ஸ்தாயிபாவம்** | **கடவுள்** |
|---|---|---|---|---|
| 41. | ஹாஸ்யம் | A | ஹாஸ்ய | மன்மதன் |
| 42. | B | கோபம் | க்ரோத | ருத்ரன் |
| 43. | வீரம் | வலிமை | உத்ஸாக | C |
| 44. | பீபத்ஸம் | அருவருப்பு | D | சிவன் |
| 45. | அற்புதம் | ஆச்சர்யம் | E | பிரம்மன் |

46. படத்தில் காட்டப்பட்ட இசைக்கருவி



1) தாளம்
2) யக்மேளம்
3) தவுள்
4) கற்றபெரய
5) மிருதங்கம்

47. ………………. ரஸம் பிரதிபலிக்கிறது



1) சிருங்காரம்
2) ரௌத்ர
3) வீர
4) பயானகம்
5) காந்தாரம்

48. படத்தில் காட்டப்பட்ட கலைஞர் ………………… பட்டத்தை பெற்றவர்.



1) நாட்டியமணி
2) பத்மபூஷன்
3) கலாபூஷணம்
4) நாட்டிய கீர்த்தி
5) கலா சுரபி

49. இப்படத்தில் காட்டப்பட்டுள்ள அணிகலன் ………………… ஆகும்.



1) சிமிக்கி    2) சூரியபிறை    3) ராக்கொடி
4) அட்டியல்    5) பதக்கம்

50. படத்தில் காட்டப்பட்ட கிராமிய நடனம்.



1) கரகம்
2) காவடி
3) ஒயிலாட்டம்
4) ஏந்தல் நடனம்
5) கிராமிய நடனம்

(50X2=100 புள்ளிகள்)

**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**

**நான்காம் தவணைப் பரீட்சை - 2021**

**Conducted by Field Work Centre, Thondaimanaru.**

**4th Term Examination - 2021**

குறுஉள

| | | |
|---|---|---|
| **பரதநாட்டியம்** | **II** | **Three Hours** |
| **Dance** | **II** | **Gr -13 (2021)** |

**53** **T** **II**

### பகுதி II

❖ **பகுதி அ இல் முதலாம் வினா உட்பட இரண்டு வினாக்களையும் பகுதி ஆ இல் எவையேனும் மூன்று வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

### அ பகுதி

*01.* i) நீர் கற்ற வர்ணத்தின் இராகம் தாளம் என்பவற்றைக் குறிப்பிடுக. *(2 புள்ளிகள்)*

ii) வர்ணத்தின் அனுபல்லவியில் வரும் 2வது தீர்மானத்தினை தாள அங்கக் குறியீட்டில் எழுதுக. *(10 புள்ளிகள்)*

iii) 2 வது சரணஸ்வரக் கோர்வைகளை தாள அங்கக் குறியீட்டில் எழுதுக. *(8 புள்ளிகள்)*

*02.* i) சிவனின் ஐந்தொழில்களும் எவை? *(5 புள்ளிகள்)*

ii) நடராஜ திருவுருவத் தத்துவத்தினை விளக்குக. *(15 புள்ளிகள்)*

*03.* இலங்கையின் ஸாஸ்திரிய நடனங்களைக் குறிப்பிட்டு அதனுள் கண்டிய நடனம் பற்றி விரிவாக விபரிக்க. *(20 புள்ளிகள்)*

### ஆ பகுதி

*04.* "பிராணி மித்ரா" என்ற பட்டத்தினை பெற்றுக்கொண்ட கலைஞரின் வாழ்க்கை வரலாற்றினையும், அவரது கலைத்தொண்டினையும் தருக.

*(20 புள்ளிகள்)*

*05.* சிறுகுறிப்பு எழுதுக.

1) சொக்கரி
2) மத்தளம்
3) ப்ரமரிபேதம்
4) யதி

*(20 புள்ளிகள்)*

06. வடமோடிக்கூத்துக்கும் தென்மோடிக்கூத்துக்கும் இடையிலான ஒற்றுமை வேற்றுமைகளை குறிப்பிடுக.

(20 புள்ளிகள்)

07. அரங்கம், ஒலி ஒளி காட்சி விதானிப்புப் பற்றி விபரிக்க.

(20 புள்ளிகள்)

08. நாட்டியக் கலைக்கு அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் பங்களிப்பினை விபரிக்க.

(20 புள்ளிகள்)